# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1673/47 - 2010 ඔක්තෝබර් 01 වැනි සිකුරාදා - 2010.10.01

*1673/47 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*எல். டீ. பீ. 13/78.*

### செயலாளர்கள் பற்றிய பிரமாணக்குறிப்பு

*சனாதிபதி அவர்களினால் பணிக்கப்பட்டவாறு 1979 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 06 ஆந் திகதியும் 48/2 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட செயலாளர்கள் பற்றிய பிரமாணக்குறிப்பை கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு திருத்துவதற்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் பணித்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*லலித் வீரதுங்க,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2010, செத்தெம்பர் 29.*

**அட்டவணை**

*1. செயலாளர்கள் பற்றிய பிரமாணக்குறிப்பின் 10 ஆம் பந்தி இத்தால் நீக்கப்படுவதுடன், அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பந்தி பதிலீடு செய்யப்படுகிறது:-*

*"10. சகல செயலாளர்களும் அரசாங்கத்தின் சகல நிதி மற்றும் நிர்வாக பணிப்புரைகளுக்கும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் பிணிக்கப்பட்டவர்களாவர் :*

*ஆயினும், சொல்லப்பட்ட பணிப்புரைகளின் ஏற்பாடுகளிலும் செயலாளர்கள் பற்றிய பிரமாணக்குறிப்பின் ஏற்பாடுகளிலும் முரண்பாடொன்றிருக்கும் பட்சத்தில் பிரமாணக்குறிப்பின் ஏற்பாடுகள் செயல்வலுப்பெறுதல் வேண்டும்."*

*2. செயலாளர்கள் பற்றிய பிரமாணக்குறிப்பின் 11 ஆம் பந்தியை இத்தால் நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியைப் பதிலீடு செய்வதன் மூலமும் :-*

*"(11) இப்பிரமாணக் குறிப்பின் பின்வரும் ஏற்பாடுகள் சனாதிபதியின் செயலாளர், அமைச்சரவையின் செயலாளர், பிரதம அமைச்சரின் செயலாளர் மற்றும் சனாதிபதி அலுவலகத்தின் பதவியினர் பிரதானி தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.";*

*10 - 642*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*